**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 28.08.2025**
**EP. No. 13/2016**
**வழக்கு சாட்சி PW.1–ஜெயக்குமார் , த/பெ.ஜானகிராமன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) மனு சொத்தை காரிசெட்டி அவர்களின் மனைவி வசந்தாவிடம் கிரையம் பெற்றுள்ளேன். அந்த சொத்தை பங்காரு என்பவர் அதற்கு முன்பு அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். பங்காரு அவர்கள் அனுபவம் செய்து வந்தபோது கூரை வீடாக இருந்தது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. நான் வாங்கும் போதே காலி இடமாகத்தான் வாங்கினேன். அந்த காலி இடத்திற்கு கிழபுறம் முனுசாமி நாயுடு அவர்களின் ஓட்டு வீடு உள்ளது என்றால் ஓட்டு வீடு மற்றும் தார்சு வீடு உள்ளது. முனுசாமி நாயுடுவின் வீட்டிற்கு மேற்குபுறம் சுவற்றிற்கு ஒட்டி தான் நாங்கள் எங்கள் வீட்டு மாடி படி வைத்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் கிழக்குபுறம் முனுசாமி நாயுடு வீட்டின் சுவர் தான் உள்ளது என்றும் காம்பௌண்ட் சுவர் எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு தெற்குபுறம் ராமன் குட்டி என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான்.

2) அவருக்கு பின்னர் பிரேமாவதி என்பவரும், அவருக்கு பின்னிட்டு உமா என்பரும் அந்த வீட்டில் உள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு தெற்குபுறமும் மேற்கண்ட உமா அவர்களது வீட்டின் சுவார் தான் உள்ளது என்றும், காம்பௌண்ட் சுவர் எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு மேற்குபுறமும் காம்பௌண்ட் சுவர் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, பூமி செட்டியார் அவர்களின் வீட்டின் சுவர் தான் உள்ளது. எங்கள் வீட்டின் தென்மேற்கு மூலையில் பூமி செட்டியின் கிணறு உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், மேற்கண்ட கிணற்றிற்கும் இடையில் சுவர் உள்ளது என்றால் பூமி செட்டியின் காம்பௌண்ட் சுவர் சுமார் 12 அடிக்கு உள்ளது. அந்த காம்பௌண்ட் சுவர் தென்வடலாக வந்து, 5, 6 இஞ்ச்

உள் பக்கம் சென்று, மீண்டும் வடக்கு புறமாக செல்கிறது. மேற்படி சுவர், மற்றும் கிணறு ஆகியவை நான் என்னுடைய சொத்தை கிரையம் பெற்று, வீடு கட்டுவதற்கு முன்பிருந்தே உள்ளது என்றால் சரிதான்.

3) மேற்கண்ட காம்பௌண்ட் சுவரை ஒட்டி நான் 1994ல் காம்பௌண்ட் சுவர் கட்டினேன். பூமி செட்டியின் காம்பௌண்ட் சுவரிலிருந்து 15 இஞ்ச் இடைவெளி விட்டு என்னுடைய காம்பௌண்ட் சுவரை தென்வடலாக சுமார் 28 அடிக்கு கட்டியுள்ளேன். தற்போதும் அந்த காம்பௌண்ட் சுவர் நிலையில் உள்ளது. நான் சொல்வது போல் என் வீட்டிற்கு தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு புறங்களில் எவ்வித காம்பௌண்ட் சுவரும் நான் கட்டவில்லை என்றும், மூன்று புறங்களிலும் உள்ள வீடுகளின் சுவர் தான் உள்ளது என்றால் வடக்குபுறமும், மேற்குபுறமும் கட்டியுள்ளேன். என்னுடைய வழக்கில் நான்குபுறமும் காம்பௌண்ட் சுவர் உள்ளதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். என்னுடைய அசல் வழக்கில் சொல்லப்பட்ட சொத்து விவரத்தை தான் இந்த மனுவிலும் நான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

4) மனு சொத்தை பார்வையிட்ட நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையிலும் ஒரு பக்கம் தான் காம்பௌண்ட் சுவர் உள்ளதாகவும், மற்ற மூன்று பக்கங்களிலும் அந்தந்த வீட்டின் சுவர் தான் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இரண்டாவது முறை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தபோதும் மேற்கண்ட சங்கதியைத்தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் காம்பௌண்ட் சுவர் எதுவும் கட்டவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தவறான சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளதற்கு திருத்துதல் செய்ய மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, இனி மேல் தாக்கல் செய்வோம்.

5) மேற்கண்ட சங்கதிகளை சொல்லி தான் அ.வ.எண்.162/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த

அ.வ.எண்.298/2010 என்ற வழக்கில் 04.08.2015 ம் தேதியில் ஒரு சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட தேதியிலேயே 1 ம் எதிர்மனுதாரர் பூமி செட்டி என்பவர் என் மீதும், என் மனைவி மீதும் தாக்கல் செய்த அ.வ.எண்.175/2011 என்ற வழக்கிலும் சமரச தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் எங்கள் வீட்டிற்கு மேற்கில் உள்ள காம்பௌண்ட் சுவரானது பூமி செட்டிக்கு பாத்தியப்பட்டது என்று நாங்கள் ஒப்புக்கொண்டதாகவும், அவர் இடிந்த அந்த காம்பௌண்ட் சுவரை மீண்டும் இருந்த 8 அடி உயரத்திற்கு கட்டிக்கொள்ளலாம் என்றும், எங்கள் வீட்டிற்கும் மேற்கண்ட காம்பௌண்ட் சுவருக்கும் 9 இஞ்ச் இடைவெளி இருக்கவேண்டும் என்றும், மேற்கண்ட காம்பௌண்ட் சுவரை கிழக்கு புறம் நான் பராமரிக்க அவருக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான், 9 இஞ்ச் அளவில் பைப் அமைத்து கொள்ளலாம் என்று தான் வழங்கப்பட்டது, காம்பௌண்ட் சுவர் பூமி செட்டிக்கு பாத்தியப்பட்டது என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை. காம்பௌண்ட் சுவர் என்னுடையது என்றும், அதில் தான் பூமி செட்டி கட்டிக்கொள்ளலாம் என நான் ஒப்புக்கொண்டிருந்தேன். பூமி செட்டிக்கு காம்பௌண்ட் சுவரே இல்லை.

6) பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் என்னை ஏமாற்றி தீர்ப்பு பெற்றுவிட்டார்களா என்றால் ஆமாம். மேற்கண்ட தீர்ப்பை ஏமாற்றி வாங்கிவிட்டார்கள் என்று அதை ரத்து செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த மனுவிலும் பிரதிவாதி அவரது காம்பௌண்ட் சுவரை தள்ளி கட்டி விட்டதாகத்தான் சொல்லி மனு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மனுவில் 15 இஞ்ச் தள்ளி கட்டியுள்ளதாக ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னுடைய வீட்டு சுவரும், 2 ம் பிரதிவாதியின் மாடிப்படியும் ஒட்டிதான் உள்ளதா என்றால் ஆமாம். பிரதிவாதி 15 இஞ்ச் தள்ளி கட்டியிருந்தால் கிணற்றிற்கும், காம்பௌண்ட் சுவருக்கும் 15 இஞ்ச் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். மேற்குபுறமுள்ள காம்பௌண்ட் சுவரானது 6 இஞ்ச் அகலம் இருக்கும். 04.08.2015 ம் தேதியிட்ட தீர்ப்பாணையில் பிரதிவாதிகளின் காம்பௌண்ட் சுவற்றிற்கும், எங்கள் வீட்டிற்கும் 15 இஞ்ச் இடைவெளி இருப்பதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். அவ்வாறு இடைவெளி இருந்திருந்தால் பிரதிவாதிகளின் சுவற்றை நான் பராமரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், என்னுடைய காம்பௌண்ட் சுவர் எதுவும் இல்லை என்பதால் தான் பிரதிவாதிகளின் காம்பௌண்ட் சுவற்றை நான் பராமரிக்கவேண்டும் என்று மேற்கண்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 23.09.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.